3. கவன ஈர்ப்பு.—

செங்கல்பட்டு மாவட்டம், திருத்தணி வட்டத்தில் இரசாயன உர விநியோகம் குறைந்த அளவு இருப்பதனால் விவசாயிகள் படும் கஷ்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையை திரு. ஈ. எஸ். தியாகராாசன் அவர்கள் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, "செங்கல்பட்டு மாவட்டத்தில் குறிப்பாக திருத்தணி வட்டத்தில் குறைந்த அளவு இரசாயன உர விநியோகத்தினால் விவசாயிகள்படும் கஷ்டம்" என்பது குறித்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, 1-4-72 முதல் 28-2-1973 முடிய திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகவும் திருத்தணி கூட்டுறவு விற்பனை நிலையத்தின் மூலமாகவும் திருத்தணி வட்டத்தில் விநியோகிக்கப்பட்ட பலவகை இராசயன உரங்களின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	மெட்ரிக் டன்கள்.
யூரியா	630
அம்மோனியம் சல்பேட்	480
டை-அம்மோனியம் பாஸ்பேட்	225
என். பி. கே.	70
முரியேட் ஆப் பொட்டாஸ்	2

2. 1-4-1972 முதல் 1973 முடிய செங்கற்பட்டு மாவட்டத்தில் விநியோகிக்கப்பட்ட இரசாயன உரங்களின் மொத்த அளவு வருமாறு :—

விநியோகம் செய்யப்பட்ட மொத்த உரம்.	உர வாரியாக அளவு விவரம். மெ.ட.
14,360 மெட்ரிக் டன்கள்—	
யூரியா	8,407
அம்மோனியம் சல்பேட்	3,502
என். பி. கே.	1,410

[திரு. மன்னை ப. நாராயணசாமி]

விநியோகம் செய்யப்பட்ட மொத்த உரம்.	உர வாரியாக அளவு விவரம். (மெட்ரிக் டன்கள்.)
டை-அம்மோனியம் பாஸ்பேட்	1,007
முரியேட் ஆப் பொட்டாஸ்	27
கால்சியம் அம்மோனியம் நைட்ரேட்	7
ஆக மொத்தம்	14,360

ஆகவே மொத்தமாக 14,360 மெட்ரிக் டன் மாவட்டம் பூராவுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாவற்றிலிருந்து 1972–73–ஆம் ஆண்டில் திருத்தணி வட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு இரசாயன உர நெருக்கடி ஏற்படவில்லையென்பதும் அதனல் அவர்களுக்கு யாதொரு துன்பமும் விளைவிக்கப்பட வில்லை என்பதும் தெரியவரும். 1972–73–ஆம் ஆண்டு நவரைப் பருவத்தில் அதிக விளைச்சல் தரும் பயிர் வகைகள் திட்டம் செயலாக்கபட்டபொழுது, மொத்த ஒதுக்கீடான 28,500 எக்கர் நிலத்தில், திருத்தணி வட்டத்தில் மட்டும் மத்திய உரத் தொகுப்பி லிருந்தும் தனியார் உர நிறுவனங்களிலிருந்தும் இரசாயன உரங்களைப் பெற்று 17,100 எக்கர் நிலம் (75 சதவிகிதம்) விவசாயம் செய்யப்பட்டது. 7–2–1973, 8–2–1973 தேதிகளில் நடைபெற்ற மாவட்ட விவசாய அதிகாரிகள், வட்டார அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் இதர விவ சாய அலுவலர்கள் மாநாட்டில் நவரைப் பருவத்தில் மீதி 40 சதவிகிதம் நிலங்களில் பயிர் செய்ய அம்மோனியம் சல்பேட்டு மற்றும் டை–அம் மோனியம் பாஸ்பேட் போன்ற உரங்கள் எல்லா ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும் மேல் உரங்களுக் காகவும் கீழ் உரங்களுக்காகவும் வழங்கப்படும் என்று முடிவு செய்யப் பட்டது.

4. தற்போது அரசின் கணக்கிலுள்ள இரசாயன உரங்களின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

		(மெட்ரிக் டன்கள்.)
1.	யூரியா	1,855
2.	அம்மோனியம் சல்பேட்	2,660
3.	டை–அம்மோனியம் பாஸ்பேட்	1,900
4.	என். பி. கே.	15
5.	முரியேட் ஆப் பொட்டாஸ்	15
	மொத்தம்	6,445

[திரு. மன்னை ப. நாராயணசாமி]

1972–73-ஆம் ஆண்டு துவக்கத்தில் தமிழ் நாடு முழுவதும் அதிலும் குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தில் இராசயன உர நெருக்கடி இருந்தது. எனவே, அரசினிடமுள்ள இரசாயன உர அளவைக் கணக்கிட்டு எல்லா வட்டத்தையும் போல் திருத்தணி வட்டத்திற்கும் இரசாயன உரம் விநியோகிக்கப்பட்டது.

தற்போது செங்கல்பட்டு மாவட்டத்தில் இரசாயன உர இருப்பு விவரம் போதுமான அளவு முன்னேறியுள்ளது. அரசும் உரத்தின் தேவை நிலை பற்றிய விவரங்களைக் கணித்து, நிரந்தரமான தேவையுடைய இடங்களுக்கு இரசாயன உரத்தை உடனுக்குடன் வழங்கி வருகிறது. இந்தியா முழுவதிலுமே இரசாயன உர நெருக்கடி பரவலாக இருந்து வருகிறது. தமிழ் நாடு அரசு மத்திய உரத் தொகுப்பிலிருந்து எவ்வளவு உரம் பெற முடியுமோ அவ்வளவு உரத்தைப் பெறுவதற்குத் தன்னுலான எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1973–74-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மானியக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு.

திரு. கா. காளிமுத்து : பாயிண்ட்ஆப் ஆர்டர், சார், தலைவர் அவர்களே, கடந்த 12-ம் தேதி மானுமதுரைக்கு அருகில் எங்கள் கட்சித் தோழர்கள் அன்பழகன், ராஜேந்திரன் தாக்கப்பட்டதைக்குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது சம்பந்தமாக அறையில் வந்து கேளுங்கள்.

4. 1973–74–ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு.—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 24—சின்கோனு.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 40—காட்டு வளத்துறை.

(இ) நிதிக் கோரிக்கை எண் 49—காட்டு வள மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் "நிதிக் கோரிக்கை எண் 24—சின்கோனு என்ற தலைப்பின்கீழ் ரூ. 75,74,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.